**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

**அசல் வழக்கு எண்.42/2020**

2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969ம் ஆண்டு 54 விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.அ.சீனிவாசன், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கலீல் | தந்தை/கணவர் பெயர் | : |
| ஜாதி | : | கிராமம் | : |
| வட்டம் | : | மதம் | : |
| தொழில் | : | வயது | : |

நாள் : 10.11.2022.

**P.W. : 1**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என் தந்தையார் வயது மூப்பின் காரணமாக நான் வெளிநாட்டில் பணிபுரிந்த காலத்திலும் அவரோடு உடன் 1ம் பிரதிவாதி வசித்து 1ம் பிரதிவாதியைத்தான் பள்ளிவாசலை முத்தவள்ளியாக இருந்து நிர்வாகம் செய்ய சொல்லி அவ்வாறு 13 ஆண்டுகள் முத்தவள்ளியாக செயல்பட்டார் என்று சொன்னால் அது பொய். அவர் 13 வருடம் முத்தவள்ளியாக சிறப்பாக செயல்பட்டதற்கு அவருக்கு கர்ஜிமூல் மஸ்ஜித் விருது தஞ்சாவூர் பள்ளிவாசல் ஜமாத்தால் வழங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 07.09.2014ம் தேதியன்று ஜமா அத் உலமா சபை பாலக்கரை வட்டாரம் அவ்வாறு வழங்கியுள்ளது என்றால் அது பொய். வா.சா.ஆ.11 ல் எனது மூத்தக்குமாரார் ஏ.கலீல் ரகுமான் வேலை விசயமாக வெளிநாடு போயிருப்பதால் மற்ற எனது இரு குமரார்கள் ஏ.ஜலீல் பாஷா பிஇ, ஏ. ஜமீல்

பாஷா பிகாம் அவர்களும் மேற்கண்ட தர்மத்தையும் மற்ற எல்லா காரியங்களை அவரது அனுமதி பெற்று ஒழுங்காக நடத்தி வந்து அதற்குண்டான கணக்குகளை ஒப்படைக்க வேண்டும் என்றும் இதர விசயங்களையும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் எந்த காலத்திலும் அனுமதி கொடுக்கவில்லை. வா.சா.ஆ.11 எழுதப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட தேதியில் நான் இந்தியாவில் இருந்தேனா என்றால் நான் இருந்து தான் மேற்படி ஆவணத்தை எழுதிக் கொடுத்தார். மறுபடியும் எப்போது நான் வெளிநாடு சென்றேன் என்றால் வா.சா.ஆ.11 எழுதப்பட்டு ஒரு மாதத்தில் நான் வெளிநாடு சென்றுவிட்டேன். இந்த ஆவணம் எழுதி வைப்பதற்கு வயது மூப்பு தான் காரணமா என்றால் அது காரணம் அல்ல. அவரால் முத்தவள்ளியாக செயல்பட முடியாத காரணத்தினால் வெளிநபர்கள் யாரும் உரிமை கோர கூடாது என்ற காரணத்தினால் எழுதி வைக்கப்பட்டது என்றும் அதன் பின்னிட்டு மேற்படி பள்ளிவாசலில் முத்த வள்ளியாக செயல்படவில்லை என்றும் அனைத்து தர்மங்களையும் நடவடிக்கைகளையும் 1ம் பிரதிவாதியே செய்து வந்தார் என்றும் அதன் காரணமாகத்தான் அவருக்கு விருதும் வழங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தற்போது யார் முத்தவள்ளியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்றால் நான்தான் இருந்து வருகிறேன். என் காலத்திற்கு பிறகு என் மகன் தான் முத்தவள்ளியாக செயல்படுவார். அதற்காக ஆவணம் எழுதி வைக்கப்பட்டுள்ளீர்களா என்றால் அதை பற்றி நீங்கள் கேட்க கூடாது. நான் என் வீட்டின் பாகம் கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் ஏன் பள்ளிவாசலை பற்றி கேள்வி கேட்கிறீர்கள்.